1972 சனவரி 31]

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, திருப்பூரில் உள்ள சிக்கண்ணு அரசினர் கலைக்கல்லூரியில் பி.காம். வகுப்பு தொடங்கப்பட்டிருக்கிறது. பி.காம். படிக்க நிறைய மாணவர்கள் வருகிறார்கள். ஆகவே, அங்கே மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதற்கான அடிப்படையான வசதியைப் பொறுத்து பல்கலைக் கழகம்தான் அனுமதி வழங்க வேண்டும். அவ்விதம் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது, எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று பல்கலைக் கழகத்திற்குச் சுட்டிக்காட்டினால் தக்க அனுமதி கிடைக்கும்.

நடுநிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்

* 168 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள நடுநிலைப்பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்ற பி.டி. படித்தவர்களை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொருள் ஆய்வில் உள்ளது.

திரு. நா. வெ. குருசாமி : தலைவர் அவர்களே, உயர்துவக்கப்பள்ளி, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக இருக்கிறார்கள். நடுநிலைப்பள்ளிகளில் எல்லாம் பி.டி. படித்தவர்களை தலைமை ஆசிரியர்களாக நியமிக்கும் செயற்குறிப்பு ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உயர்துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி போன்றவற்றில் பி.டி. படித்தவர்களை தலைமை ஆசிரியர்களாகப் போடுவது பொருத்தமானது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆய்வில் உள்ளது. பி.டி. படித்தவர்களைத்தான் எல்லாப் பள்ளிகளுக்கும் தலைமை ஆசிரியர்களாகப் போட வேண்டுமென்று ஆணையிடுகின்ற நிலைமை இல்லை. பி.டி. படித்தவர்களாக தலைமை ஆசிரியர்கள் இருந்தால் பள்ளியின் நிர்வாகமும், மாணவர்களின் தரமும் உயரும், நல்ல சூழ்நிலை ஏற்படும் என்பதால் அந்தக் கருத்து ஆராயப்பட்டு வருகிறது.

Polytechnics for women

* 169 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any Central grant has been received by the Women's Polytechnics in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.